மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வற்புறுத்தலை நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவருடன் கலந்து பேசி இதைப் பரிசீலனை செய்து ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறோம்.

Price of palm jaggery

* S.N. Q. No. 45— Thiru J James: will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) whether palmyrah jaggery is sold at a very low price and the cost of production is much more than the selling price;

(b) whether there is any proposal under consideration to render help to the Palmyrah tappers by way of giving fire wood at a concessional rate and loan facilities and

(c) whether the Government will come forward to purchase Palmyrah Jaggery giving reasonable price and to export the same to Srilanka where there is good demand for the same

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது :

(அ) தமிழ்நாட்டில் பனை வெல்லம் சராசரியாக ஒரு கிலோ ரூ. 2.40 ஆக விற்கப்படுகிறது. அதன் உற்பத்திச் செலவு கிலோ ஒன்றுக்கு ரூ. 2.00 ஆகிறது . ஆகவே, உற்பத்திச் செலவு விற்பனை விலையைக் காட்டிலும் குறைவாக உள்ளது.

(ஆ) தமிழ்நாடு கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தில் பதநீர் இறக்குபவர்களுக்கு குறைந்த விலையில் விறகு கொடுப்பது பற்றி எந்தத் திட்டமும் இல்லை. ஆனால்' மூலதனச் செலவுக்கும் நடைமுறை மூலதனச் செலவிற்கும் ரூ. 300 லிருந்து ரூ. 350 வரை இவ்வாரியத்தால் கடனாக வழங்கப்படுகிறது. நடைமுறை மூலதனத்தின் ஒரு பகுதியை விறகு வாங்க உபயோகிக்கலாம்.

(இ) இலங்கையில் இந்திய பனை வெல்லத்திற்குத் தேவையிருப்பதாக தகவல் ஏதுமில்லை. இலங்கையில் நல்ல விலைக்கு பனை வெல்லத்திற்குத் தேவை இருந்தால் அந்நாட்டிற்கு பனை வெல்லத்தை ஏற்றுமதி செய்யும் வழிவகைகளைக் காண மாநில பனைவெல்ல சம்மேளனத்தை கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் அறிவுறுத்தும்.

1979 ஏப்ரல் 11]

திரு ஜே. ஜேம்ஸ் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, உற்பத்திச் செலவைவிட அதன் பொருள் விலை அரசாங்கத்தின் கணக்கின்படி ஒரு கிலோவிற்கு 40 காசுதான் கூடுதலாக இருக்கிறது. அது தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்குக் கட்டுப்படியாகும் என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். கட்டுப்படியாகக் கூடிய நிலையில் உற்பத்திச் செலவைவிட விற்பனைச் செலவு சற்றே அதிகமாக இருந்தாலும் கூட, அந்த விலையில் இல்லாவிட்டாலும் கூட அவர்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்று அரசு அறியுமா? 300 ரூபாய் கடன் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 20 ஆயிரம் தொழிலாளர்களில் 270 தொழிலாளர்களுக்குத் தான் கூட்டுறவுச் சங்கங்களால் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அத்தனை தொழிலாளர்களுக்கும் அந்த கடன் வசதியை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு இலங்கைக்கு ஏற்றுமதி செய்வது சம்பந்தமாக அரசு தீவிரமாக நடவடிக்கை மேற்கொள்ள முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மட்டும் தான் கடன் வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். சம்மேளத்தின் மூலமாகக் கடன் வழங்கும் போது கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இருக்கின்ற 750 பேர்களுக்கு மட்டும் தான் கடன் வழங்கப்படுவதாகவும் சொல்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்யும். காரணம் இந்த சம்மேளனத்தின் மூலம் கடன் வழங்கும் போது பெரும்பாலோர் பயனடைய வேண்டுமென்பது தான் அரசின் எண்ணம். குறைந்த எண்ணிக்கையுடைய உறுப்பினர்களுக்கு கடன் கொடுக்கப்படுகிறது என்றால் கூடுதல் எண்ணிக்கையில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாவதாக இலங்கைக்கு ஏற்றுமதி செய்வது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் கொடுத்த பிறகு தான் அப்படி ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு அங்கே தேவை இருக்கிறதா என்று அறியச் சொல்லியிருக்கிறோம். இந்திய நாட்டில் உற்பத்தியாகும் பனை வெல்லத்திற்கு அங்கே தேவையிருக்குமானால் நிச்சயமாக பனை வெல்லத்தை ஏற்றுமதி செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

திரு சோ. அழகர்சாமி : துணைத் தலைவரவர்களே, இந்த பனை வெல்லம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பனை ஏறும் தொழிலாளர்களுக்கு ரூ. 2.40 விலையாகக் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது

வெளியே விற்கப்படுகிற விலை. ஆனால், அந்தத் தொழிலாளர்களுக்கு ரூ. 1.50 , ரூ. 1.60 தான் கிடைக்கிறது. வியாபாரிகள் அந்த விலைக்கு வாங்கி ரூ 2.40க்கு விற்பனை செய்கிறார்கள். முன்னால் மாவட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சம்மேளனம் இருந்தது. இப்போது அவை கலைக்கப்பட்டுள்ளன. அவைகளை மீண்டும் புதுப்பித்து, பனைமரம் ஏறும் தொழிலாளர்களுக்கு நியாய விலை கிடைக்க அந்த சம்மேளனமே நல்ல விலை கொடுத்து வாங்கி, விற்பனை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, 8 கிலோ பனை வெல்லம் தயாரிப்பதற்கு ரூ. 10.07 செலவாகிறது. அதில் 3 ரூபாய் அந்த பனஞ்சாறை வெல்லமாகக் காய்ச்சுவதற்கு பணியாற்றுகின்ற பெண்ணுக்குக் கொடுக்கப்படுகிறது. விறகுக்கு ரூ. 3.60 இப்படியெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் 8 கிலோ வெல்லம் தயாரிப்பதற்கு ரூ. 10 .07 செலவாகிறது. ஆனால் 8 கிலோ வெல்லத்தை தாயரிப்பதற்கு பனஞ்சாறு இறக்கும் தொழிலாளர்களுக்கு 16 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆக 6 ரூபாய் அந்தத் தொழிலாளர்களுக்கு கூலி கிடைக்கிறது. அவன் வீட்டிலே பணியாற்றக்கூடிய பெண்தான் பனஞ்சாறு காய்ச்சுகிறாள். அதற்கு 3 ரூபாய் கூலி. ஆக 9 ரூபாய் அளவிற்கு அவர்களுக்குக் கிடைக்கிறது. வருஷம் பூராவும் இந்தத் தொழில் இருந்தால் அவர்கள் வளமாக இருப்பார்கள். ஆனால் 150 நாட்களுக்குத்தான் வாய்ப்பு இருக்கிறது. இதற்கு மேல் ஏதாவது உதவி செய்வது என்பது கொஞ்சம் சிரமமானது. அதற்குப் பதிலாக இவ்வாறு உடலுழைப்பை வைத்து, பல மரங்களில் ஏறி இறங்குவது மிகவும் சிரமம் என்று கருதி, புதிதாக ஏதாவது கருவி கண்டுபிடித்து அதிகமாக சிரமம் இல்லாமல் நிறைந்த அளவில் பனஞ்சாறு கொண்டுவர முடியுமா என்பதைப் பற்றி இந்த சம்மேளனம் ஆராயும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மாவட்ட அளவிலே இந்த சம்மேளனத்தை புதுப்பிப்பது பற்றி கூறினார்கள். அதுபற்றி போதுமான அளவுக்குக் தகவல் சேகரித்து, விரைவில் செயல் படக்கூடிய சூழ்நிலையை அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

* வினா எண்·680.—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கடந்த காலங்களில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் முறைகேடுகள் நடந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் என்ன முறைகேடுகள் நடந்துள்ளன.

(இ) இதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. ?